ஸம்புடம் 2. பரிதாபி ஆவணிமீ ஸஞ்சிகை 7

ஸ்ரீ:

# வேதாந்த தீபிகை

என்னும்

# ஸ்ரீ அஹோபில மட சிஷ்ய சபை பத்ரிகை.

ஸ்ரீ அஹோபில மட சிஷ்ய சபையின் காரியதரிசியால்,

ப்ரதி மாஸம் ப்ரசுரம் செய்யப்படும்.

கலாரத்நாகரம் அச்சாபீஸ், சென்னை.

வருஷம் 1-க்கு கட்டணம் ரூ. 2-0-0.] [ஒரு ஸஞ்சிகையின் விலை அணு 3.

# THE VEDANTA DIPIKA.

A MONTHLY TAMIL JOURNAL

OF

HINDU RELIGION AND PHILOSOPHY.

PUBLISHED BY THE GENERAL SECRETARY,

THE AHOBILA MUTT SISHYA SABHA.

Vol. 2—No. 7.

*August 1912.*

## வேதாந்த தீபிகை

பரீதாபி௵ ஆவணி௴.

## விஷய ஸூசிகை.

பக்கம்.

1. விபீஷணர் சரணாகதி
   பாரத்வாஜர் ... ... ... ... 247.
2. ஸ்ரீ பாகவத தனிஸ்லோகீ
   ஸ்ரீமாந் சே. நரஸிம்ஹமாசாரியர் ... ... 259.
3. ஸீதாப்பிராட்டி வைபவம்
   ஸ்ரீமாந். எஸ். கோபாலஸ்வாமி ஐயங்கார் ... 268.
4. ஸ்ரீ வைஷ்ணவ ஸம்பிரதாயங்கள்
   ஓர் ஸ்ரீவைஷ்ணவர் ... ... ... 277.
5. ஸுபாஷித மாலை ... ... ... ... ... 282.
6. கடிதங்கள் ... ... ... ... ... 284.
7. பத்ராதிபரின் குறிப்புகள் ... ... ... ... 286.

*Copy-right reserved.*

ஸ்ரீ:.

ஸ்ரீ க்ருஷ்ணாய பரமாத்மநே நம:.

# ஸ்ரீ பாகவத தனிச்லோகீ.

ஜ்ஞாநே ப்ரயாஸமுதபாஸ்ய நமந்த ஏவ, ஜீவந்தி ஸந்முகரிதாம் பவதீய வார்த்தாம் । ஸ்தாநே ஸ்திதா: ச்ருதிகதாம் தநுவாங்மநோபி: யே ப்ராயசோऽஜித ஜிதோऽப்யஸி தைஸ்த்ரிலோக்யாம் ॥ ஸ்ரீபாகவதம், **10 - 14, 3**

'ஸாதுஜநத்தை நலியும் கஞ்சனைச்சாதிப்பதற்கு ஆதியஞ்சோதி யுருவை அங்குவைத்திங்குப் பிறந்து', ஒருத்தி மகனாய்ப் பிறந்தோரிரவில் ஒருத்தி மகனாய் நாமறிய வாய்ப்பாடிவளர்ந்து, மாயச்சகடமுதைத்து, மருதிறுத்து, ஆயர்களோடு போயாநிரைகாத்து, அணிவேயின் குழலூதி, வித்தகனாய் ஸ்ரீக்ருஷ்ணன் நிற்குமளவில், ஒருநாள் கன்றுகள்மேய்த்துத் தன் தோழரோடு கலந்து, காடுகளுக்குப்போய், இஷ்டமான பசுக்களை இனிது மறித்து நீரூட்டி விட்டுக்கொண்டு விளையாடி, வேர்த்துப்பசித்து வயிறசைந்து வேண்டடிசி லுண்ணும்போது,

பிப்ரத் வேணும் ஜடரபடயோ: ச்ருங்கவேத்ரே ச கக்ஷே,
வாமே பாணௌ மஸ்ருணகவலம் தத்பலாந்யங்குலீஷு ।
திஷ்டந் மத்யே ஸ்வபரிஸுஹ்ருதோ ஹாஸயந் நர்மபி: ஸ்வை:,
ஸ்வர்கே லோகே மிஷதி புபுஜே யஜ்ஞபுக் பாலகேளி: ॥

என்கிறபடியே, தேவதைகளெல்லாரும் ஆகாயத்தில் திரளாக வந்து நின்று பார்த்துக்கொண்டிருக்கையில், 'அஹம் ஹி ஸர்வயஜ்ஞாநாம் போக்தா ச ப்ரபுரேவ ச' என்றும், 'விஷ்ணுரேவ

யஜஜிதெ' என்றும் சொல்லுகிறபடியே, எல்லா யக்ஞங்களாலும் ஆராதிக்கப்படுகிற ஸர்வேஸ்வரன் லோகத்தில் பாலர்கள் விளையாட்டை யனுசரித்தவராய் நின்றார். அன்றியும், 'ஷுமெ லொகெ திஷதி பஹுஹஜெ'—ஸ்வர்க்கத்தில் வஸிக்கிறதேவதைகள் பார்த்துக்கொண்டிருக்கும்பொழுதே, பரமைகாந்திகளால் செய்யப்படும் யாகாதிகளான ஆராதநங்களைத் தேவர்களுக்கு அவைகளில் சம்பந்தமில்லாமல், 'வக்ஷஹஷெவ ஹெரண்ய ஹவி ஹவிஷாம் ஜஸநோஹவநு' என்றும், 'ந யஷுவ்யா ஜயா யஜியம்' என்றும் சொல்லுகிறபடியே, தானே புஜிக்கும் சர்வேஸ்வரன் புஜித்தார். அப்படி புஜிக்குங்கால், ஸ்ரீ க்ருஷ்ணன் கோபாலப்பிள்ளைகளின் நடுவே நின்றுகொண்டு, கோபால ஜாதியின் வழக்கப்படி வேணு, சங்கம், பசுக்கறக்கும் பாத்ரம், கோல் இவைகளை கடிசூத்ரத்திலும் கக்ஷத்திலு மாகக்கொண்டு கையில் தத்யந்ந கபளத்தை ஏந்தி அதற்கு உபதம்சங்களான பழம் முதலியவைகளை விரல்களி லடக்கிக் கொண்டு பரிஹாஸ வார்த்தைகளைப் பேசிக்கொண்டு புஜித்தார்.

அதைக்கண்ட சதுர்முகன் பகவானுடைய விசித்ரசக்தியைப் பார்ப்பதற்காகவும், கோபாலர்களின் பாக்யாதிஶயத்தில் பொறாமையினாலும், முதலில் கன்றுகளையும், அவைகளைப்பகவான் தேடப்போன சமயத்தில் கோபாலப்பிள்ளைகளையும் மறைத்துவிட, ஸ்ரீ க்ருஷ்ணன் தானே கன்றுகளாகவும் கோபாலப்பிள்ளைகளாகவும் தனித்தனி ரூபங்களைத் தரித்தவராய் அவரவர்கள் செய்யும் க்ரமங்களை அநுஸரித்து எல்லா வ்யாபாரங்களையும் தன் விசித்ர சக்தியினாலே செய்துவந்தார். மேலும் சதுர்முகன் தன்னுடைய லோகம்போய்ச் சேருவதற்கு முன் ஸ்ரீ கண்ணபிரான் அங்குப்போய்த் தானே சதுர்முகனைப் அவர் ஸிம்ஹாஸநத்தில் வீற்றிருக்க, அங்கே இதற்குள் வந்த சதுர்முகனை வாசற்காப்பார்கள், கவன் மாயையால் மோகித்தவர்களாய், உள்ளேவிடாமல் தடுத்து அவமதித்தார்கள். பிறகு சதுர்முகன் அவமானத்தால் துக்கத்துடனும் ஆச்சர்யத்துடனும் பூலோகத்துக்குத் திரும்பிவந்து திரு

வாய்ப்பாடியில் போய்ப்பார்க்கையில், அத்தனை கன்றுகளும் கோபாலப்பிள்ளைகளும் சங்க சக்ர கதாபாணிகளாய் ஸ்ரீ க்ருஷ்ணனுடைய திவ்ய மங்கள விக்ரஹங்களாய்த் தோன்றக்கண்டு, விஸ்மிதராய் ஸ்தோத்ரம்செய்து, அபராதக்ஷாபணம் செய்துகொள்ளுகிருர். அதில் மேலெழுதிய ப்லோகத்தால், எத்தனையேனும் உத்க்ருஷ்ட ஜ்ஞானவான்களாலும் வேதங்களாலும் கண்டறிய முடியாத நீர், உம்மைச்சரணமாக அடைந்தவர்களுக்கு ஸ்வாதீநமாகிறீர், என்கிருர்.

ஜ்ஞாநே—கர்மயோக ஜ்ஞாநயோக பக்தியோகங்களாகிற ஜ்ஞாநத்தில். இவ்விடத்தில் 'கர்மணோ ஹ்யபி போத்தவ்யம்', 'கர்மண்யகர்ம ய: பச்யேத்', 'கர்மண்யபிப்ரவ்ருத்தோபி' 'நைவ கிஞ்சித் கரோதி, கர்மாவஸ்தேந ஜ்ஞாநாப்யாஸமேவ கரோதி'—என்பது முதலான ப்ரமாணங்களால் கர்மயோகமும் ஆத்மஸ்வரூபா நுஸந்தான கர்ப்பமானதால் அதையும் ஜ்ஞாநபதத்தாலே விவக்ஷிப்பது உசிதம். ஜ்ஞாநமென்று பக்தியோகத்தையும் ஆத்மாவலோகநத்தையும் சொன்னபோதிலும், ஆத்மாவலோகநத்தில் ஆசையில்லையாகில் அதற்குக்காரணமாகிய கர்மயோகத்தைச் செய்ய மாட்டார்க ளாகையால், கர்மயோகத்தை விட்டார்களென்பது அர்த்த ஸித்த மாகவுமாம். அன்றிக்கே, 'ஜ்ஞாநே ப்ரயாஸ முதபாஸ்ய' என்பதால் ஆத்மாவலோகநம், பக்தியோகம் இவைகளில் வருத்தத்தைத் தவிர்ந்து என்று அர்த்தமாவதால், அவைகளைச்செய்வதிலும் அவைகளுக்கு உபாயமான கர்மயோகத்தைச்செய்வதிலும் நேரிடக்கூடிய வருத்தத்தை விட்டு என்று சொல்வதாலும், கர்மயோகத்தையும் விட்டார்கள் என்று பொருளாயிற்று. இப்படிக் கர்மயோக ஜ்ஞானயோக பக்தியோகங்கள் மூன்றையும் ஸங்க்ரஹிக்க வேணுமென்கிற எண்ணத்திலேயே, மூலத்தில் 'ஹ்ருதி' என்று ப்ரயோகிக்காமல் 'ஜ்ஞாநே' என்று பொதுவாய் ப்ரயோகித்தது.

'உத்வாஸ்ய' — அதிகமாக நீக்கி, இங்கு 'ஸ்வாஸ்ய' என்றாலே போதுமாயிருக்க 'உத்' என்று சேர்த்தெடுத்தது, அசக்யமானவற்றில் ஆரம்பமும் செய்யாதே விலக்கி என்று பொருள் பட. அன்றிக்கே, அவைகள் அப்பொழுது அசக்யங்களானாலும், அவைகளை சக்யமாக்க அநுகுணமான சக்தியைத்தான் ஸம்பாதிக்க முயலாதே விட்டுவிட்டு, என்றும் பொருள் ஆகிறது, அவைகளில் சக்தி யுண்டானாலும், அதை வேண்டாது, 'சரணநெறி வேறோர் கூட்டு வேண்டில் அயனத்திரம் போல் வெள்கி நிற்கும்' என்கிறபடி ப்ரபத்திக்கு அவைகளின் ஸாஹாய்யம் தேவையில்லை யென்பதை அறிந்து, என்றும் அர்த்தமாம். இதனால் ஆகிஞ்சந்யமென்கிற அதிகாரமும் கார்ப்பண்யம் என்கிற அங்கமும் சொல்லப்பட்டது. 'ஸதோஷ்யஜ்ஞாயிகாரஸ்வ ரகிஂவந்ய வாரஸ்ரீ யா । ஸநஂமஹாவொ யதூஹணா ரஸஜ்ஞாரஂஹ வாரணஂ । தத்த்யாஸா வருஸநஂ ஸ்ரூஹாஸ்ரு நயாய ஸஂயுவநஂ ॥'' என்று சொல்லப்பட்ட 'வரூ' ச்லோகத்தின் 'வரிதயஜ' என்னும் பதத்தின் அர்த்தங்களெல்லாம் இங்கு அநுஸந்தேயங்கள்.

இந்தப்பதங்களை உக்திநிஷ்டன் பக்கலில் அந்வயிக்கும்போது, அங்காங்கிகளுடைய உபயோகங்கள், நிபந்தனங்கள், கரண மந்த்ரத்தில் அவைகள் ப்ரதிபாதிக்கப்படுகிற ப்ரகாரங்கள், இவைகளை விசதமாகத்தெரிந்து கொள்வதிலுண்டாகும் வருத்தத்தை விட்டு, என்றாகவுமாம். 'ஆநுகூல்யஸங்கல்பாத்யங்கங்களில் வைசத்யமில்லாதார் அவனை ஒழியப்போக்கற்றுநிற்கிற அதிகாரமும், அபேக்ஷித்தால் ரக்ஷிப்பாரென்கிற விச்வாஸமு முடையவராய்க்கொண்டு' என்று ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன் அனுக்ரஹித்திருக்கிறார். இதை ஆசார்யநிஷ்டன் பக்கலில் யோஜிக்கும்போது, சரணாகதியின் ஸ்வரூப ஸ்வபாவங்களை உள்ளபடியே அறிந்து கொள்வதில் ச்ரமத்தை முற்றிலும் தாங்கள் நீக்கிவிட்டு, என்று பொருளாகும்.

[illegible] — ப்ரபந்நர்களாகவே யிருந்துகொண்டு. இங்கு '[illegible]' காரத்தினால், கேவல சோம்பேறிகளைப்போல் ஆயாஸத்துக்குப் பயந்துமாத்ரம் இவர்கள் கர்மாதியோகங்களை விட்டவர்களில்லை. தான்கோலினகாலத்தில் பலந்தர ஶக்தமாய், [illegible]மாய் உள்ள ஒரு உபாயத்தை அவலம்பித்தே அவைகளை விட்டார்க ளென்றதாயிற்று.

[illegible] ।
[illegible] ॥

([illegible] ।
[illegible] ॥)

என்று அச்யுதஶதகத்தில் அருளிச்செய்திருக்கிறபடி. இவர்கள் விளம்பாஸஹர்களாய் ப்ரபந்நர்களானவர்கள். '[illegible]' என்னும் பதம் ஶரணாகதியைச்சொல்லும் என்பது '[illegible]' இத்யாதி வசநங்களாலே ஸித்தம். இதை ஸ்ரீமத்ரஹஸ்யத்ரய ஸாரத்திலும் பரக்கக்கண்டு கொள்வது. அன்றிக்கே '[illegible]' என்று அந்வயித்துக் கொள்ளவுமாம். அப்போது, '[illegible] । [illegible]' என்கிற படியே மநோவாக்காயங்களாகிற த்ரிகரணங்களாலும் பூர்ணமான ஶரணாகதியைச் செய்தவர்களாய், என்கிறபடி.

[illegible] — [illegible]' என்றும் '[illegible] । [illegible]

வஹா ஷு ரமெஸ॥ என்றும் 'யத்ரம் வி ஊவி கூவடிாணோ விஷேணா ராயதமெந வமெஸ' என்றும் சொல்லுகிறபடியே பகவத்கைங் கர்யாதிகளுக்கும் பாகவத ஸஹவாஸத்துக்கும் ஆசார்ய பக்திக் கும் தகுந்ததாய், நித்ய நைமித்திகங்களுக்கும் உபரோதமில் லாத இடங்களில் வஸிப்பவர்களாய். அன்றிக்கே, 'ஷூாநெஷூி தாঃ—ஶ்ராவயெ ஷுத-ரொ வணூாநு கூஜவா ஷ்ராஹ்மணா ஶ்ரு தঃ' இத்யாதிகளிற் சொன்ன தந்தம் வர்ணுச்ரமங்களுக்குத் தகுந்த இடங்களி லிருந்துகொண்டு. ஷூாநெஷூிதாঃ—தாம்நிற்க வேண்டிய நிலைகளிலிருந்து, அதாவது, தந்தம் ஸ்வரூபோபாய புருஷார்த்த நிஷ்டைகளுக்கு நிற்கவேண்டிய நிலைகளிலிருந்து கொண்டு, என்ருகவுமாம். அன்றிக்கே, 'ஷூாநெஷூிதா ஷூஜொ நஜஃ' என்று அந்வயித்து, ஶரணுகதி பண்ணுகிறவன் நிற்க வேண்டிய நிலையில் நின்று கொண்டவர்களாய், அதாவது 'வாவঃ வஶம் ஷ்ராயூயிதா ஷ்ரவஷெ்ஜஸ ஷூயஶம்ஶ்ரியம்' என்கிறபடியே முதலில் புருஷகார ஸமாஶ்ரயணம் பண்ணி, அதனுல் 'சுஷூ தெ' என்கிற திருமுகப்பாசுரம் பெற்று, அதனுல் கழிக்கப்பட்ட உபாயவிரோதிபாபங்களை யுடையவராய், என்ருகவுமாம். ஷூாநெஷூிதாঃ - பகவான் ரக்ஷிக்கைக்கு வேண்டிய நிலையில் நின்றவர் களாய், அதாவது, மற்ற அங்கங்கள் அந்தந்த இடத்தில்சொ ல்லப்பட்டபடியால், பரிசேஷித்திருக்கிற, 'நீர் என்னை ரட்சித்த ருளவேண்டும்' என்கிற ப்ரார்த்தனையைச்செய்து கொண்டென் ருகவுமாம். இத்தால் 'மொஷு கூவவாண' மென்னும் அங்க மும் சொல்லப்பட்டதாயிற்று. உக்தி நிஷ்டையில் சொல்லும் போது, பகவான் சமீபத்தில் நின்றுகொண்டு, என்ருகவுமாம். ஆசார்யநிஷ்டனைச் சொல்லும்போது, ஆத்மீயகோடியில் சேர்க் கும்படியான 'வாதுঃ ஷெ்ரஷூஸயாஶிஷ்யঃ ஐதெ்வ வ நிவெஷயெஸ' என்று சொல்லப்பட்ட ஆசார்யாபிமாநமாகிற நிலை யில் நின்றுகொண்டவர்களாய், என்ருகவுமாம்.

227



ஸந்த்வஸிதாம்—பெரியோர்களால் சொல்லப்பட்ட. ஶ்ருதிமதாம் — வேதங்களிலிருக்கிற. ஹவதீய வாக்யாம்—உம்முடைய ஆஜ்ஞா நுஜ்ஞைகளை. யெஜீவந்தி — எவர்கள் உபஜீவிக்கிறார்களோ. இத்தால் கூாங்க்ஷ்ய ஸங்கஹமும் ப்ராதிகூல்ய வர்ஜநமும் சொல்லிற்றாயிற்று. 'ஶ்ருதிமதாம்—தங்கள் காதையடைந்த, 'ஹவதீயவாக்யம்—உம்முடைய திவ்யசரித்ரத்தை. தநுவாஜ்மநோஹி: — கரணத்ரயத்தாலும். யெஜீவந்தி — எவர்கள் உபஜீவிக்கிறார்களோ, தரித்தெழுதி வாசித்துக் கேட்டும், 'வணங்கி வழிபட்டும் பூசித்தும் போக்கினேன் போது', 'சீர்கலந்த சொல்நினைந்து போக்காரேல், சூழ்வினையினாழ்துயரை என்னினைந்து போக்குவரிப்போது' என்று சொல்லுகிறபடியே, தங்கள் காலக்ஷேபத்துக்கு உடலாக எவர்கள் வைத்துக்கொண்டிருக்கிறார்களோ, என்றாகவுமாம். 'ஹவதீய' - திருமாலாலருளப் பெற்ற ஶடகோபன் 'மயர்வறமதிநலமருளினன்' என்கிறபடி உம்முடைய க்ருபைக்கு விஷயீபூதர்களான நம்மாழ்வார்முதலிய பூர்வாசார்யர்களுடைய, 'வாக்யம்' அருளிச் செயல்களான ஸ்ரீ பாஷ்ய திவ்யப்ரபந்தாதிகளையும், ஆசார்யகளால் உபதேசிக்கப்பட்ட மந்த்ரங்களையும், அவர்களால் நியமிக்கப்பட்ட கைங்கர்யங்களையும், என்னவுமாம். இத்தால் ஸ்ரீ பாஷ்யக்காரர் அந்திமதசையில் அருளிச்செய்த ஐந்துவித கைங்கர்யங்களும் ஸங்க்ரஹிக்கப்பட்டன.

அன்றிக்கே, 'ஹவதீயவாக்யம்' உம்முடைய வார்த்தையாகிய 'ஸக்ருதேவ ப்ரபந்நாய' 'ஸர்வதர்மாந் பரித்யஜ்ய', 'ராமோ த்விர்நாபிபாஷதே', 'அஹம் ஸ்மராமி மத்பக்தம்' இத்யாதிகளை, 'யெஜீவந்தி' எவர்கள் தங்களுக்குத் தாரகமாக வைத்துக்கொண்டிருக்கிறார்களோ, என்றாகவுமாம். இத்தால், 'வேதாந்தஸ விஹாரஸாரமபி ஶ்ரயா ஸம்ஶேந விஸ்ரம்பிதஃ' என்றும்,

ஶரணாக³த இதி ஜநிதே
    ஜநவாதே³ऽபி யத்³யுத்³யத ந ரக்ஷஸி மாம் |
ஸவேக்ஷ்ய ஸாக³ர கோ⁴ஷ:
    ஸாக³ர வாஹிநே தாத்³ருஶம் தவ வசநம் ||

(ஶரணாக³த இதி ஜநிதே
    ஜநவாதே³ऽபி யத்³யுத்³யத ந ரக்ஷஸி மாம் |
ஸவேக்ஷ்ய ஸாக³ர கோ⁴ஷ:
    ஸாக³ர வாஹிநே தாத்³ருஶம் தவ வசநம் ||)

என்றும், 'பன்றியாம் தேசுடைய தேவர் திருவரங்கச் செல்வனர், பேசியிருப் பனவைகள் பேர்க்கவும் பேராவே' என்றும், 'தம்மை யுகப்பாரைத் தாமுகப்பர் என்னுஞ்சொல், தம்மிடையே பொய்யானற் சாதிப்பா ராரினியே' என்றும் சொல்லுகிற படியே அந்தந்த அவதார வார்த்தைகளில் விஸ்வாஸம் சொல்லப்பட்டபடியால், 'மஹாவிஸ்வாஸம்' என்னும் அங்கமும் இங்கு சொல்லப்பட்டது.

இதை உக்திநிஷ்டன் பக்கலில் யோஜிக்கும்போது, 'ஸவ்யபாத³ம்' 'ஶரண்யனறிய பூர்ணப்ரபத்தி கர்ப்பமான ஆசார்யோ பதிஷ்டமான வாக்யத்தால்' என்றருளிச் செய்தபடியே, உம்முடைய க்ருபைக்கு பாத்ரர்களான ஆசார்யர்களா லுபதேசிக்கப்பட்ட வாக்யத்தையே, 'யேஜீவந்தி' - எவர்கள் தங்களுக்குத் தஞ்சமாகக் கொள்கிறார்களோ, என்றர்த்தமாகும். ஆசார்யநிஷ்டன் திறத்தில் யோஜிக்கும்போது,

நிக்ஷிப்தாத்ம ஸமர்ப்பணம்
    நிவேதி³தம் தத்³ருஶ்யாதி காருண்யவத்³பி⁴: |
தே தத்³ருஷ்ட்வா நிவஸ
    ஹ்ருத³ம் நாஸ்து ஹரஸ்வ ஸ்வாத்ம ஹரம் ||

229

ஸ்ரீ:

# ஸ்ரீ வைஷ்ணவ ஸம்பிரதாயங்கள்.

(ஓர் யோஜனை.)

லோகஹித ப்ரவர்த்தர்களான மஹான்களால் ஏற்படும் ஸம்பிரதாயங்களுக்கு நாளடைவில் சிற்சில குறைவுகள் உண்டாகின்றன. இவைகள் அபிப்ராய பேதங்களடியாக ஜனித்துப் பின்பு பலவகையாய் வ்ருத்தியாகி ஸம்ப்ரதாய பேதங்களுக்கு ஹேதுவாகின்றன. இப்படிப் பின்ன ஸம்பிரதாயங்கள் ஜனித்த பிற்பாடு, இந்த வ்யத்தியாஸங்கள் புத்திவிஷயங்கள் என்று கொள்ளாமல், இவைகளை அனுஷ்டிக்கும் ஸம்பிரதாயிகளில் பெரும்பாலர் இந்த பேதங்கள் அடியாகக் கக்ஷிகளையும் வைஷம்யங்களையும் உண்டுபண்ணியும், வ்ருத்திசெய்தும் வருவதை நாம் பார்த்து வருகிறோம். இந்தக்கக்ஷிகளும் வைஷம்யங்களும் நிகமத்தில் ஸம்பிரதாயங்களாக ஆகிவிடுகின்றன. இப்படி மூல ஸம்ப்ரதாயங்களுக்குக் கிளைகள் கிளம்பி மஹான்கள் பஹுப்பிரயாஸை யெடுத்துக் க்ருஷி பண்ணினதெல்லாம் நிஷ்பலமாகி, லோகத்திற்கு ஹிதமல்லாதனவைகள் ஜனித்து நிற்கக்காண்கிறோம்.

கீழ்ச்சொன்ன ரீதியை நாத, யாமுந, யதிவரர்களால் ஸ்தாபிக்கப்பட்ட ஸ்ரீ வைஷ்ணவ ஸம்பிரதாயமும் அடைந்திருக்கிறதென்பதை எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள். இது அத்யந்தம் சோகிக்கத்தகுந்த விஷயமாயிருந்தாலும், இவ்வுண்மையை யறிந்த ஆஸ்திகர்கள் இப்போதேற்பட்டிருக்கிற குறைகளை நிவர்த்தி செய்கிறதற்குத் தகுந்த முயற்சிகளைச் செய்யாமல் உதாஸீநராய் இருந்து வருகிறார்கள். இவ்வைஷம்யங்களை ஸாது என்று

இவர்கள் கிரஹித்திருக்கிறார்களென்று சொல்லவிடமில்லை. ஒரு கால் இந்த வைஷம்யங்கள் ஸாம்யமாகும்படி நாம் எடுக்கும் பிரயத்தனங்கள் தலைக்கட்டாது என்று எண்ணியிருந்தாலும் இருக்கலாம். இந்த எண்ணத்துக்குக்காரணம் உத்ஸாஹக்குறைவும், எடுக்கும் முயற்சியில் பலதேசங்களிலிருக்கும் ஆஸ்திகர்கள் அன்வயிப்பார்களோ என்கிற நிச்சயக்குறைவு மென்றுமே சொல்லவேணும்.

நம்முடைய தேசத்தில் பஹுபேர்கள்கூடி ஸாதிக்கவேண்டிய அம்சங்களுக்கு ஸாதனங்கள் இன்னபடியென்று ஜனங்களுக்கு ப்ராயசஃ தெரியாது. ஸபைகள் என்றும் ஸமிதிகள் என்றும் பூர்வத்தில் ஏற்பட்டிருந்தாலும், காலதோஷத்தால் இவைகளின் ஸ்வரூபங்களும் உபயோகங்களும் மறக்கப்பட்டிருக்கின்றன. ஆனல், இதுவிஷயத்தில் ப்ரபலர்களான பாஸ்சாத்தியருடைய அனுபவத்தையும், அவர்களுடைய ஸங்கசக்தியையும் திருஷ்டாந்தமாகக்கொண்டு இத்தேசத்திலும் பஹுமுகமான பிரயத்னங்கள் நடந்துவருகின்றன. இப்படி யேற்பட்ட ஸபைகளில் நம்முடைய பொதுநன்மைக்காக ஏற்பட்ட "காங்கிரஸ்" என்று ப்ரஸித்தமான ஸபை இத்தேசத்தில் பிரபலமானது. இம்மாதிரியாகவே மதவிஷயங்களிலும் அநேக சபைகள் ஏற்பட்டிருக்கின்றன. அவைகளில் சில, நம்முடைய ஆசாரங்களில் தோஷங்களிருக்கின்றன வென்றும் அவைகளை நிவ்ருத்திசெய்ய வேணுமென்றும், உத்யோகித்து வருகின்றன. இப்படி வைதிக மார்க்கஸ்தாபந விஷயத்தில் ப்ரபலமான ஸபைகள் இல்லாமையானது அநாதியான இந்த ஆஸ்திகதேசத்தவர்களுக்கு ஓர் பெரிய குறைவு.

வைதிக மார்க்கங்கள் தழைத்து வருவதற்காக ஆஸ்திகர்கள் ஸபைகூடிவருவது சிஷ்டாசாரமில்லை என்று சிலர் நினைத்தார்களாகில், ஸ்ரீ பாஷ்யக்காரர் நாளில் இப்படி ஸபைகள் ஏற்பட்டிருந்ததை இவர்களுக்கு ஸமாதானமாகச் சொல்லலாம். ஸ்ரீ பாஷ்யக்காரர் காலத்தில் ஸ்ரீ வைஷ்ணவ ஸம்பிரதாயம் எங்கும் பரவி, வெகுபேர்கள் அதில் அந்வயித்தார்கள். இந்தஸம்பிரதாயம் லோக

த்தில் மறையாமலிருக்கும் பொருட்டும், ஜ்ஞாநாநுஷ்டாந பூர்த்தியில்லாதவர்களால் ஸம்ப்ரதாய ப்ரவசநம் நடவாமலிருக்கும் பொருட்டும், சிலரை ஆசார்ய புருஷர்களென்றும், மற்றவர்களை "சபையார்" என்றும் ஸ்ரீ பாஷ்யக்காரர் நியமித்தார் என்பது ப்ரஸித்தம். இதுதான் "சவையார்" என்று வழங்கி வருகிறது.

ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாயாபிவ்ருத்திக்காக ஸ்ரீ வைஷ்ணவர்கள் ஸபைகளை ஏற்பாடு செய்வது அத்யாவச்யகம் என்று சொல்வதற்கு ஒருவிரோதமும் இல்லை. இப்படி ஏற்படாவிட்டால் நம்முடைய வைஷம்யங்கள் ஶமநத்தை யடையாமலும் நம்முடைய ஜ்ஞாநாநுஷ்டாநங்க ளெல்லாம் நிஷ்பலங்களாயும், அந்ய ஸம்பிரதாயஸ்தர்கள் பரிஹஸிக்கும்படிக்கும் வரும் நிலைமை தான் மேலிட்டு நிற்கும்.

வைஷம்யங்களைக் கொண்டாடுவதால் ஏற்படும் அநிஷ்டங்கள் பல. அவைகளை ஒருவாறு எடுத்துக்கூறுவதில், அவைகளின் அபசாரக்ரௌரியம் தெரியாதவர்களுக்கு தெரியும்படிக்கும், தெரிந்தவர்களுக்கு நிர்வேதம், அல்லது சோகம், ஜனிக்கும்படிக்கும் இருக்குமாகையால், அதினால் ஒரு தோஷமுமில்லை. பிரதமத்தில், பகவத் ஸந்நிதிகள்விஷயமாக உண்டாகும் அபசாரங்கள் அநேகம். அவைகளாவன:—(1) "பாத்ரங்கள்" என்கிற வ்யாஜத்தையிட்டு பகவத் ஸந்நிதியில் சண்டையிடுதல். இது தண்டதரனான ஸர்வேஶ்வரன் முன்னிலையில் ஏற்படும் அபசார மாகையால், இதை அஸஹ்யாபசாரத்தில் சேர்க்கவேணும். (2) மேற்கண்ட வ்யாஜத்தையிட்டு, பகவத் பிம்பங்களுக்கு பின்னத்தைச் செய்தல். இது பகவானுடைய திருநெற்றியில் அலங்காரமாக விருக்கும் திருமண்காப்பை ஒருவிதமாக விருந்தால், மற்றொருவிதமாகச்செய்தல் முதலியது. இத்தொழிலில் கைகூசாதவர்களை ஸ்ரீ வைஷ்ணவர்கள் என்று வ்யவஹரிப்பது ஔபசாரிகம் என்று சொல்லவேணும். த்விபுஜமும் சதுர்புஜமும் கொண்டு மனங்கவரும் பெருமாளுக்கு திருமண்பேதத்தை ஸஹியீரோ? (3) எம்பெருமானுடைய திருவாரதா

னமும் மஹோத்ஸவங்களும் நடக்கவொட்டாமல் தடைசெய்தல். இது பகவானுடைய வைபவத்தைக் குறைக்கும்படி முடிவதால் இதில் இழிந்தவர்கள் த்வாதச புண்டர தாரானாலும் பசுத்தோல் போர்த்த புலியேபோன்ற ஆஸுரர்கள், நாஸ்திகர்கள் என்கிற கணக்கில் சேர்ந்தவர்கள் என்று சொல்வது அதிவாத மாகாது. (4) எம்பெருமானுடைய திருவோலக்கத்தில் அயலாரை சேஷவ்ருத்தி செய்யக்கூடாதேன்று தகைதல். இது ஸ்ரீ வைஷ்ணவ கோஷ்டி சேரவொட்டாமல், அநந்ய ப்ரயோஜநராய் கைங்கரியத்தில் உத்யோகித்தவர்களுக்கு மனம் புண்படச்செய்தலால், இந்த அபசாரத்தின் க்ரௌர்யம் ஸித்தம். இப்படி அபசாரத்தை விளைத்துத் தாங்கள் செய்யும் கைங்கர்யம் பகவானுக்கு உகப்பாகும் என்று நினைப்பது மோஹக்ருத்யம் என்பதில் சந்தேகமில்லை. இப்படியே ஆழ்வார் ஆசார்யர்கள் ஸந்நிதிகளில் ஏற்படும் அபசாரங்களும் அநேகம்.

இந்த வைஷம்யங்களடியாக, ஓரிடத்தில் தேசிகன் மணவாளமாமுனி பிம்பங்களில் திருநாவிகத்தைப் பின்னப்படுத்திவிட்டார்கள். ஓரிடத்தில் தேசிகனுக்கு இல்லாத திருமண்காப்பை ஸமர்ப்பித்தும், ஸ்ரீபாஷியக்காரர் ஸந்நிதியில் தாங்கள் ஒருவருமே கோஷ்டி ஸுகம் அனுபவிக்கும்படிக்கும் செய்து வருகிறார்கள். சிலவிடங்களில் மணவாளமாமுனி ஸந்நிதியை ஆளவந்தார் ஸந்நிதியென்று மாற்றியும், தேசிகன் ஸந்நிதியை மணவாளமாமுனி ஸந்நிதியென்று மாறுபாடாயும் வ்யவஹரித்து வருகிறார்கள். மற்று மோரிடத்தில் தேசிக ஸம்பிரதாயிகள் கைங்கரியம் செய்யக்கூடாதென்று தகைத்துவருகிறார்கள். ஓரிடத்தில் மணவாள மாமுனி ஸந்நிதியை இல்லாமல் செய்துவிட்டார்கள். வேறோரிடத்தில் தேசிகனுக்கு மாறுபாடான திருமண்காப்பை ஸமர்ப்பித்து வருகிறார்கள். ஒருஸ்தலத்தில் தேசிகனுக்கு உத்ஸவாதிகள் நடக்கவொட்டாமல் தடைசெய்து வருகிறார்கள். ஓரிடத்தில் தேசிகன் ஸந்நிதியை யெடுத்துவிட்டார்கள். சிலவிடங்களில் எம்பெருமானுக்கு உத்ஸவங்கள் நடக்கவொட்டாமல் சண்டையிட்டு வருகிறார்கள். இப்படி திவ்யதேசங்கள்தோறும் ஸ்ரீ வைஷ்ணவர்களால் அநேக துஷ்கிருத்யங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

இந்த வைஷம்யங்கள் ஸந்நிதிகளில் மாத்திரமேயல்லாமல் ஸ்ரீ வைஷ்ணவர்கள் திருமாளிகைகளிலும் படியேறி, கொடுக்கல் வாங்கல் முதலான கிருஹகிருத்தியங்கள் நின்றுவிட்டன. இப்படியே முநித்ரயம், மடம் என்று பேதப்பட்டு ஒருவரை மற்றொருவர் தாழநினைத்து வருகிறார்கள். தக்ஷிண தேசங்களில் இந்தப் பேதத்தை ப்ரபலமாய்க்காணலாம்.

ஸ்ரீ பாஷ்யக்காரர் பகவத்பாகவத ஸம்ருத்தியை வ்ருத்தி செய்தார். அவருடைய திருவடி ஸம்பந்திகள் பகவத் பாகவதாபசாரங்களை விருத்திசெய்து வருகிறார்கள். ஸ்ரீ பாஷியக்காரர் லோகஹிதத்திற்காக ஸம்பிரதாயப் பிரவசனம் செய்தார். அவருடைய திருவடிஸம்பந்திகள் அந்த ஸம்பிரதாயத்தை வ்யாஜமாக்கி சண்டையிட்டு வருகிறார்கள். ஸ்ரீ பாஷியக்காரர் செய்த க்ருஷி இப்படி பர்யவஸித்திருப்பது நம்முடைய தௌர்பாக்கியமே யல்லாமல் வேறில்லை.

இப்படி வைஷம்யங்கள் மேலிட்டிருந்தாலும் நமக்குள் பரம ஆஸ்திகர்களும், அவைகளை திக்கரிக்கிறவர்களும், நடந்துவரும் துஷ்கிருத்யங்களை தலையெடாமல்செய்ய வேண்டுமென்கிற நினைவுள்ளவர்களும், ஐகமத்யத்தையும், ஜ்ஞாநாநுஷ்டாநங்களையும் வ்ருத்தி செய்ய வேண்டு மென்கிற சிந்தையுடையவர்களும் அநேகர் இருக்கிறார்கள். ஆனால் இவர்களெல்லாரும் ஒன்றுகூடி ஒருவிதமான முயற்சியும் இந்த விஷயத்தில் எடுக்கவில்லை. இப்போது சிஷ்ய சபை ஏற்பட்டிருப்பதால் இந்தச்சபையின் வருஷமஹோத்ஸவத்தில் ஸ்ரீ வைஷ்ணவர்களுக்குள் ஏற்பட்டிருக்கும் வைஷம்யங்களை நிவர்த்தி செய்வதற்கு வேண்டுமான முயற்சியையும், ஸாதனங்களையும் செய்யவும், ஏற்படுத்தவும், இன்னும் உத்தேசத்துக்கு அநுகூலமான உபாயங்களை ஆலோசனைசெய்து யத்தனிக்கவும் உபயோகமாக ஒருகமிட்டி ஏற்படுத்த வேணுமாய் பிரார்த்திக்கிறேன். இதற்கு முன்பாகவே ப்ரஸித்தர்களான ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு ஆஹ்வான பத்திரிகைகள் அனுப்பி அவர்களுடைய அபிப்ராயங்களை அறிந்துகொள்வது நலம்.

ஓர் ஸ்ரீவைஷ்ணவர்.

234

ஸ்ரீ:.

# ஸுபாஷிதமாலா.

த்விஜேந்த்ரோऽபி கலாட்யோऽபி க்ருதவார்த்யவகாஹந: ।
நித்யம் நிரங்குஶவ்யாபாரோ ந ச ஶுத்தோ பவத்யயம் ॥ ௧॥

ஒருவன் விப்ரச்ரேஷ்டனாயினும், மிகப்படித்தவனாயினும், சமுத்ராம் முதலான தீர்த்தங்களில் பலமுறை ஸ்நாநம் செய்தவனாயினும், நன்னடக்கையில்லாமல் தன்னிஷ்டப்படி செய்கிறவனானால், அவனுக்கு மனத்தின் சுத்தி ஏற்படாமல் போய்விடும். இதற்குச் சந்திரன் உதாஹரணம். யாகங்களின் காலங்களை நியமிப்பதால் த்விஜர்களுக்குத் தலைவனாயும், கலைகளால் பூர்ணனாயும், தினம் கடலில் முழுகுவோனாயுமுள்ள சந்திரனுக்கும் களங்கம் நீங்காததால், மேல்வெளுத்திருந்தும், உள் சுத்தி உண்டாகவில்லை.

---

அவ்யவஸ்திதவ்ருத்தாநாம் மீலிதஶ்ருதிசக்ஷுஷாம் ।
அயதார்ஜிதபோகாநாம் ஆஶீரப்யஹிதாவஹா ॥ ௨॥

ஶிஷ்டாசாரத்தை அனுசரித்து நடக்காதவர்களும், சாஸ்த்ரமென்கிற கண் திறக்காமல் மூடியிருப்பவர்களும், தர்மமல்லாத மார்க்கங்களில் சேர்த்த போகங்களை யுடையவர்களுமா னவர்களுடைய அனுக்ரஹமும் தீங்கைச் செய்யுமேயொழிய நன்மைக்கு ஹேதுவாகாது. இதற்குப்பாம்பு திருஷ்டாந்தம். அதன் வ்ருத்தமும் (இருப்பும்) அவி என்னும் பர்வதத்திலே இருக்கும்; அதற்கு எப்பொழுதும் ச்ருதி (காது), கண்ணேயாகும்; அதன் போகமென்னும் சரீரமும், அதர்மம் அல்லது பாஹிம்ஸைக்கே ஆகும்; ஆகவே, அதன் ஆசி என்னும் பல்லும் விஷத்தைக்கக்குமே ஒழிய சுகத்துக்கு ஆகாது.

---

யாந்தி ந்யாயப்ரவ்ருத்தஸ்ய திர்யஞ்சோऽபி ஸஹாயதாம் ।
அபந்தாநம் து கச்சந்தம் ஸோதரோऽபி விமுஞ்சதி ॥ ௩॥

ஸன்மார்க்கத்தில் நடப்பவன் தன்செய்கைகளின் குணத்தால் கரசரணுதிகளுள்ள தன் ப்ருத்யவர்க்கத்தையும் மற்றெல்லா ஜனங்களையும் தனக்கு பவ்யமாகச்செய்வதுடன், யானை குதிரை முதலான திர்யக்குகளையும் தனக்குபகரணங்களாகச் செய்து கொள்ளுகிறுன். வழிதப்பி நடப்போனுக்கு உடன்பிறந்தானும் துணையாகமாட்டான். இதன் உண்மையை ஸ்ரீராமனிடத்திலும் ராவணிடத்திலும் காணலாம். ராமன் குணத்தில் ஈடுபட்டு சகாயம் செய்தார்கள், வானரர்கள். துர்நடத்தையால் வெறுப்படைந்து ராவணனை விட்டு விலகினவன், உடன்பிறந்த விபீஷணன்.

---

𑌵𑌿𑌧𑌿𑌨𑍈𑌵 𑌵𑌿𑌹𑌿𑌤𑍇𑌨 𑌕𑍃𑌤𑌃, 𑌪𑌯𑌸𑍋𑌸𑍍𑌸𑌲𑌿𑌲𑌕𑍍𑌷𑍀𑌰𑌤
𑌵𑌿𑌵𑍇𑌕𑌵𑌿𑌧𑌿𑌃 । 𑌕𑌤𑌿 𑌵𑌾 𑌦𑌿𑌨𑌾𑌨𑌿 𑌵𑌦 𑌪𑌯𑌸𑍍𑌵𑌿𑌨𑍋𑌦, 𑌕𑌲𑌶𑍀
𑌸𑍁𑌤𑌃 𑌕𑌬𑌳𑌯𑌞𑍍 𑌜𑌲𑌧𑌿𑌮𑍍 ॥ ௪॥

வஸ்துக்களின் ஸ்வபாவ சக்திகளுக்குக் காரணம் விசாரிப்பது நிஷ்ப்ரயோஜனமாகும். அவைகள் ஈச்வரன் இச்சையால் ஸ்வதஸ்ஸித்தமாய் ஏற்பட்டவைகளா யிருக்கும். இதற்கு ஹம்ஸமும் அகஸ்த்யரும் நிதர்சனமாவார்கள். நீரும் பாலும் சேர்த்து வைத்தாலும் நீரைப்பிரித்துப் பாலையருந்தும் குணமுள்ளது ஹம்ஸம். இந்த சக்தியை அதற்கு யாரும் பயிற்றவில்லை. அகஸ்த்யர் கடலை உள்ளங்கையில் அடக்கி உண்டதும் அவருக்குண்டான மகிமையால்தான். இந்த சக்தியையும் அவர் பலதினங்கள் பயின்று அடைந்தா ரென்பதில்லை.

---

𑌸𑍍𑌵𑌲𑍍𑌪𑌤𑌾𑌵 𑌦𑌮𑍇𑌸𑍍𑌤𑍍𑌯𑌨 𑌜𑌹𑍍𑌨𑍋𑌰𑍍𑌹𑌿𑌂 𑌨𑌿𑌹𑍍𑌨𑌵𑌃 ।
𑌕𑌾 𑌕𑌥𑌾 𑌤𑌸𑍍𑌯𑌬𑌾𑌲𑌸𑍍𑌯 𑌵𑌿𑌶𑍍𑌵𑌮𑌾𑌤𑍍𑌮𑍋𑌽𑌪𑍍𑌯𑌤𑌿𑌵𑍍𑌯𑌤𑌃॥௫॥

எவ்வளவு பராக்ரம சாலியும் கர்வமடைவது சரியல்ல; அவனுக்கு மேற்பட்டவன் ஸம்பவித்து அவன்கர்வத்தை யடக்குவது ஸகஜம். கங்கை என்னும் ஒரு நதியை மாத்ரம் குடித்து, அதின் கர்வத்தை அடக்கி அதைக் காதிலுல்விட்ட ஜஹ்நுமஹர்ஷி பெரியவராயினும், பலநதிகளையும் அடக்கியுள்ள சமுத்ரத்தை உள்ளங்கையில் தேக்கிய அகஸ்த்யர் அவரிலும் பெரியரே. ஆயினும், கடல்களுடன் எல்லா உலகங்களையும் தன்வயிற்றில் வைத்துத்தான் சிறு உருவெடுத்து ஆலிலையில் படுத்துறங்கும் சிறுவனுக்கு இவர் மகிமை எவ்வளவு?

---

(இன்னும் வரும்.)

236

☞ [கடிதங்கள் எழுதுகிறவர்களுக்கு அறிக்கை.—கடிதங்கள் எழுதுகிறவர்களின் அபிப்ராயங்களுக்குப் பத்ராதிபர் உத்தரவாதமில்லை. கடிதங்கள் நல்ல காகிதத்தில் ஒருபக்கத்தில் தெளிவாக எழுதப்படவேண்டும். எழுதுகிறவர்கள் பெயரும் விலாஸமும் பத்ராதிபருக்கு வ்யக்தமாய் அறிவிக்கப்படவேண்டும். வேதாந்ததீபிகை பத்ராதிபர்.]

ஸ்ரீ:

# கடிதங்கள்.

(1)

## கதிரி.

ஸ்ரீ வேதாந்த தீபிகை பத்ராதிபருக்கு,

கதிரி என்பது பாகாலா - தர்மவரம் ரெயில் மார்க்கத்தில் அனந்தபுரம் ஜில்லாவைச்சேர்ந்த ஓர் பெரிய ஊர். இது விஜயநகரத்து ராயர்கள் அரசாட்சி செய்துவந்த நாளில் பிரபலமான ஸ்ரீ வைஷ்ணவ அக்கிரகாரமாக விருந்ததாய்த் தெரியவருகிறது. தற்காலத்தில் இதர பட்டணங்களைப்போல இவ்வூர் க்ஷீணதசையை யடைந்திருந்தாலும் பூர்வத்தில் அடைந்திருந்த பெருமையின் சின்னங்களை இப்பொழுதும் இவ்விடத்தில் காணலாம். ஆந்திர தேசங்களிலும் மேல்நாட்டிலும் பிரசித்தி யுடையதான ஒரு பகவத்ஸந்நிதி இவ்வூரிலிருக்கிறது. இந்த ஸந்நிதி திருவெவ்வுளூர் ஸந்நிதியைக்காட்டிலும் இரண்டு பங்குபெரிது. இதில் கோவில்கொண்டு எழுந்தருளியிருக்கும் எம்பெருமான் ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன். உத்ஸவமூர்த்தி அதிஸுந்தரமாய் ஸேவை ஸாதிக்கிறார். இந்த ஸந்நிதி பூர்வத்தில் ஆதிவண் சடகோபஜீயருடைய அபிமானத்தைப்பெற்றுப் பின் காலத்தில் எழுந்தருளியிருந்த அழகிய சிங்கர்களாலும் உத்ஸவாதிகள் நடத்தப்பெற்றுவந்தது என்று அவ்வூரில் நாளைக்கும் சொல்லிவருகிறார்கள். இந்த ஸந்நதிக்குள் இருக்கும் புஷ்கரிணிக்கு பவநாசி யென்றுபெயர் வழங்கிவருவதால் அஹோபில ஸம்பந்தம் நன்கு விளங்குகின்றது. நிகமாந்ததேசிகன், ஸ்ரீபாஷ்யக்காரர், நம்மாழ்வார் இவர்களுக்குதனித்தனி ஸந்நிதிகள் ஏற்பட்டிருக்கின்றன. கோவிலுக்குப் பின்புறத்தில் நீராழி

மண்டபத்துடன் கூடின புஷ்கரிணியும் அதன் கரையில் பெரிதான திருமஞ்சன மண்டபமும் இருக்கின்றன. ஸந்நிதிக்கு முன்புறத்திலிருக்கும் வீதியில் உத்ஸவகாலங்களில் உலாகண்டருளுவதற்காக அழகியதான மண்டபங்கள் நிற்கின்றன. இந்த எம்பெருமான் வரப்ரஸாதி யாகையால் மேல் நாட்டிலிருந்து கணக்கிறந்த ஸேவார்த்திகள் வருகிறார்கள். இவர்கள் ஸமர்ப்பிக்கும் காணிக்கைகளைக்கொண்டும் 'தஸ்தீக்' வருமானத்தைக் கொண்டும் உத்ஸவாதிகளைச் சீராய் நடத்தி வருகிறார்கள். சென்ற தை மாசத்தில் பார்வேட்டை யுத்ஸவம் மிகச்சிறப்பாய் நடந்துவந்தது. ஊருக்கு வெளியில் பெருமாள் எழுந்தருளி இதற்கென்று மிராசுதாரர்களான சில கிராமத்தார்கள் ஒரு புலியைப்பிடித்துக் கொண்டுவந்து உத்ஸவாந்தத்தில் அதை விட்டுவிடுகிறது வழக்கம். அப்படி விடபட்டமிருகத்தை ஆயுதபாணிகளான ஜநங்கள் துப்பாக்கியால் சுட்டுவந்தார்கள். சுமார் 50 - வருஷங்களுக்கு முன் இந்த உத்ஸவத்தைக் கூடவிருந்து நடத்திவந்த துரையொருவர் அக்காலத்தில் ஒருவருக்குநேரிட்ட அபாயத்தைக் காரணமாக்கி உத்ஸவத்தை நிறுத்திவிட்டார் என்று தெரியவருகிறது. இந்த ஸந்நிதியில் திருநாராயணபுரத்தில் நடந்துவரும் வழக்கம்போல ப்ரஹ்மோத்ஸவம் நடந்தபிற்பாடு மூன்று நாளைக்கு பஞ்சமர்கள் கோவிலுக்குள் அதற்காக நியமித்திருக்கும் இடத்தில் வந்து பெருமாளை ஸேவித்துப்போவது வழக்கமாயிருக்கிறது. இப்போது இவ்வூரில் இரண்டொரு ஸ்ரீ வைஷ்ணவர்கள் தவிர வேறே கிடையாது. கண்டிக்கோட்டையார் பெருமாளுக்கு திருவாராதனத்தைச்செய்துவருகிறார்கள், இந்த ஸந்நிதியின் சரித்திரத்தை விசாரித்துப்பார்த்தால் அகோபிலமடத்தின் பெருமை நன்றாய்த் தெரியவருகிறது.

ஓர் தேசாந்தரி.

---

(2)

ஸ்ரீவேதாந்ததீபிகை பத்ராதிபருக்கு.

ருதிமதீ விவாஹவிஷயமாய்ச் சென்ற வைகாசிமாஸ ஸஞ்சிகையில் அடியேன் உதாஹரித்த வசநங்களெல்லாம் வைத்யநாத தீக்ஷிதீயம் - வர்ணாச்ரம காண்டம் - க்ரந்தலிபி 109-110-வது பக்கங்களில் இருக்கின்றன. அவைகளை 'ஒரு ஆஸ்திகர்' கடாக்ஷிக்கவேணுமென்று ப்ரார்த்திக்கிறேன்.

புத்தங்கோட்டகம்,
ஸ்ரீநிவாஸாசார்யன்.

பரீதாபி௵
ஆடிமீ 30உ.

238

ஸ்ரீ:.

# பத்ராதிபரின் குறிப்புகள்.

வேதாந்த தீபிகை.

இந்தப் பத்ரிகைக்குப் பத்ராதிபராயிருந்து ஆரம்பம்முதல் இதை ச்லாக்யமாய் நிர்வஹித்துவந்த ஸ்ரீ. எஸ். வாஸுதேவாசார்யர், இந்த கைங்கர்யத்தை நடத்திவரச் சில அஸௌகர்யங்களால் இனி ஸாத்தியப்படவில்லையென்று தெரிவித்ததின்பேரில், ஸ்ரீ அகோபிலமடத்துச் சிஷ்யஸபையின் பொதுக்கார்யதர்சி, அவர் அபிப்ராயத்தை அநுஸரித்து, அவர் அதிகார நிவ்ருத்தியை அங்கீகரிக்க வேண்டியதாயிற்று. சென்ற ஆடிமாஸத்திய ஸஞ்சிகைமுதல் ஸ்ரீ. வாஸுதேவாசார்யருடைய பத்ராதிபத்வ ஸம்பந்தம் இதற்கு ப்ராப்தமாகவில்லை. இந்தப்பத்ரிகையை ப்ரசுரம்செய்துவரும் பொதுக்கார்யதர்சியே இனி இதன் பத்ராதிபத்வத்தை நிர்வஹித்து வருவதாய் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அப்படி நிர்வஹித்து வருவதில், ஏற்கெனவே பத்திரிகைக்கு விஷயப்ரதாநதிகள் செய்துவந்த வித்வான்களின் உபகாரம் அவிச்சின்னமாய்ப் பிந்தியும் நடந்துவருமென்கிற நம்பிக்கையே முக்யமான ஆலம்பநம். பொதுவாய் ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கும் விசேஷித்துத் தமிழ்நாட்டிலுள்ளவர்களுக்கும் பகவத்ராமாநுஜ ஸம்ப்ரதாயத்தின் ஸ்வரூப ஸ்வபாவங்கள் விசதமாய்த் தெரியவேண்டியதற்காக ஏற்படுத்தப்பட்டிருக்கும் இந்தப்பத்ரிகையை ஆஸ்திகர்களான எல்லோரும் அபிமாநிப்பார்களாகையால், இதை நடத்திவருவதற்கு ஏற்படும் பத்ராதிபர்கள் நிமித்த மாத்ரர்களாய் இருந்தால் போதுமானது. இதுவரையிலும் இந்தப்பத்திரிகையை ஆதரித்துவரும் ஸுஹ்ருத்துக்களின் ஸங்க்யை த்ருப்திகரமாகவே இருந்தாலும், செவ்வையாய்ப் பத்ரிகையை நடத்திவரவேண்டிய த்ரவ்யார்ஜநத்துக்குப் பர்யாப்தமாகி வரவில்லையாகையால், இதுவிஷயத்தில் பத்ரிகை ஸுஹ்ருத்துக்கள் ச்ரத்தைசெய்து இதன் வ்யாப்தியை விஸ்தரிப்பதில் உபகரிக்க வேணுமென்று ப்ரார்த்திக்கப்படுகிறது.

“ உத்த்ருத்ய தோஷாந் க்ருதிபிஸ் ஸ்வகீயைஸ் ஸம்ஸோத்யநவா த வ க்ருதீஸ க்ருதிர் மதீயா । யத்ருத்தி ஸாத்ய யோ ஜநநீ ஸ்வயா வா கிம் வா ஹவிஷ்ய ஹவதி கிம் விதூநீஹாரேண ” என்று ஆசார்யன் பெருமாளிடம் விஜ்ஞாபநம் செய்தபடி, இதை இனி நடத்திவரும் ப்ரகாரங்களில் ந்யூநதை இருந்தாலும் அது பகவதிச்சாதீநமென்று எண்ணி நம்ஸுஹ்ருத்துக்கள் க்ஷமைகொள்ள வேணுமென்றும், அப்படி ந்யூநதைகள் வராமல் வித்வான்களும் இதரர்களும், பத்ரிகாக்ரஹணம் முதலான உபகாரங்களைச்செய்து அநுக்ரஹிப்பார்களென்றும் ப்ரார்த்திக்கப்படுகிறது. இதுவரையிலும் பத்ராதிபத்வத்தை நிர்வஹித்துவந்த ஸ்வாமிக்குச் சிஷ்யஸபையின் நிர்வாஹக கமிட்டியாருடைய நிரவதிகமான க்ருதக்ஞதையையும் இந்த அவஸரத்தில் ப்ரகாசிப்பது உசிதமாயிருக்கிறது. அந்த ஸ்வாமியின் மிகவும்ஜ்ஞாநப்ரதங்களான உபந்யாஸங்களைப்படித்து வந்த பத்ரிகை ஸுஹ்ருத்துக்கள் மேன்மேலும் அப்படிப்பட்ட உபந்யாஸங்களை விரும்புவார்களென்பதில் ஸந்தேஹமில்லை. இந்தப்பத்ரிகையின் வ்ருத்தியில் ஸதா அபிநிவேஶமுள்ள அந்த ஸ்வாமியும் இந்த மநோரதத்தை யதாவஸரம் பூர்த்திசெய்து வருவாரென்பதும் நிச்சயம். ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிஹ்மன் கைங்கர்யரூபமாய் எண்ணி ப்ரசுரிக்கப்படும் இந்தப்பத்திரிகை விஷயத்தில் ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாயிகளின் ஆபிமுக்யம் வ்ருத்தியாகவேணுமென்று விசேஷமாய்ச் சொல்லவேண்டியதில்லை யென்று நம்புகிறோம்.

**ஸ்வதேஶ பாஷைகள்.**

இந்தத்தேசத்தில் வழங்கிவரும் பாஷைகளில் ஸம்ஸ்க்ருதத்தினிடம் ஸாக்ஷாத்தாய் உண்டாகாமல் ஸ்வதந்த்ரமாய் ஏற்பட்டிருப்பவைகள்தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம்ஆகிய நான்கே. இவைகள் ஒவ்வொன்றிலும் ஸம்ஸ்க்ருத சம்பந்தமில்லாத ப்ரக்ருதிகளும் ப்ரத்யய வர்க்கங்களும் ஏராளமாய் இருப்பதால் இவைகளை ஸ்வதந்தர பாஷைகளென்று சொல்வது வழக்கமாக விருக்கிறது. ஆகிலும் இவைகளிலும் ப்ரஸித்தங்களான கத்ய காவ்யங்களும் பத்ய காவ்யங்களும் ஶாஸ்த்ரவிஷயங்களான க்ரந்தங்களும் பஹுவாய் ஸம்ஸ்க்ருத பத வ்யாமிச்ரங்களாகவே இருப்பது தெரிந்த விஷயம். இவைகளில் முந்தினதான தமிழ்ப்பாஷையில் ஸம்ஸ்

க்ருதக்கலப்பு மற்ற பாஷைகளில்போல் அவ்வளவு அதிகமில்லை யென்று சொல்லலாம். ப்ராசீநங்களான சங்கத்தமிழ் என்னப்படும் காவ்யங்களில் தமிழ்ப்பதங்களே விசேஷமா யிருப்பதையும், பின்புள்ள கம்பன், புகழேந்தி, வில்லிபுத்தூரார் முதலானவர்களின் செயல்களில் ஸம்ஸ்க்ருத பதங்கள் அதிகமாயிருப்பதையும் பார்த்தால், ஸம்ஸ்க்ருத வித்வான்கள் சிறப்படைந்த காலங்களில் அந்தப்பாஷையிலிருந்து பதங்களை இதரகவிகளும் தாராளமாய் உபயோகித்து அதனால் கௌரவம் சம்பாதித்தார்களென்றே தெரிய வருகிறது. மேலும் ராமாயணம், பாரதம், வேதாந்தம், அலங்காரம், ஜ்யோதிஷம், முதலான விஷயங்களில் முதனூல்கள் ஸம்ஸ்க்ருதத்திலேயே இருப்பதுபற்றி அதுவிஷயமான தமிழ் க்ருந்தங்களிலும், ஸம்ஸ்க்ருதபதங்கள் விசேஷித்திருப்பது ஆச்சர்யகரமில்லை. நாமிங்கு தமிழுக்குச்சொல்வது மற்ற தேச்ய பாஷைகளுக்கும் ஸமாநம். விசேஷித்து ஸம்ஸ்க்ருதபதங்களை உபயோகிப்பதால் தான் தமிழ்ப்பாஷைக்குக் கௌரவமென்று சொல்வது மாத்ரம் சரியல்ல. கவியின் மகிமையால் சுத்தத்தமிழில் இருக்கும் க்ரந்தங்களும் படிப்பவர்களுக்கு எளிதில் அர்த்தத்தைக்கொடுத்து இனிமையாகின்றன. இதற்கு நம்மாழ்வாருடைய திருவாய்மொழியில் பலபாகங்களையே நிதர்சனமாகச் சொல்லலாம். 'கிளரொளி யிளமை கெடுவதன் முன்னம்', 'நீராய் நிலனாய்த் தீயாய்க் காலாய் நெடுவானாய்', 'வாயுந்திரை யுகளும் கானல் மடநாராய்' என்கிற திருவாய்மொழிகளும் மற்றும் அனேக திருவாய்மொழிகளும் ஸம்ஸ்க்ருதக்கலப்பு அனேகமாய் இல்லாதவைகளா யிருந்தும் எல்லோர்க்கும் எளிதில் பொருள்படக்கூடியவையா யிருப்பதை நாம் நன்றாய் அறியலாம். ஆகையால் அந்தந்த பாஷைக்கு ஸ்வரூபம் குறைவடையாமலிருக்க அந்தந்த பாஷாபிமாநிகள் இதரபாஷைகளின் கலப்பைக்குறைக்க வழிதேடுவதே முக்யம். எந்த அர்த்தத்துக்கும் அநுகுணமான பதங்கள் பஷையிலிருக்க, வேறு பதங்களை வருவிப்பது, தனவானானவன் பொருளை மறைத்து வைத்துப் பிறரிடம் கடன்வாங்குவதை ஒக்குமென்பதில் சந்தேகமில்லை. ஆகிலும் வெகுகாலமாய்த் தமிழிலும் மற்ற பாஷைகளிலும் ஸம்ஸ்க்ருதபதங்கள் கலந்துவருவதால் அந்த வழக்கத்தைத் த்விர்த்துச் செந்தமிழில் எழுதுவது ச்ரமகரமாயும் அதைப்படிப்போர்க்கும் கஷ்டமாயும் ஆகிறது. மேலும் விசேஷமாய் ஸம்ஸ்க்ரு

த்தில் பயிற்சி யுள்ளவர்கள் தமிழ் தேசவாஸத்தினுல் தமிழையே ஸ்வபாஷையாய்ச் செய்துகொண்டும் பேசுவதைத்தவிர மற்ற விதமாய்த் தமிழில் ச்ரத்தையற்றவர்களாய் ஆய்விடுகிருர்கள். இப்படிப்பட்டவர்கள் சௌகர்யத்துக்காகவே நம் ஸம்ப்ரதாயத்தில் 'மணிப்ரவாளம்' என்று சொல்லப்படும் ஸம்ஸ்க்ருதம் கலந்த தமிழ்நடை ஏற்பட்டிருக்கிறது. இந்த நடையை அநுஸரித்த க்ரந்தங்களில் திருவாய்மொழியின் வ்யாக்யாநமாகிய ஆறுயிரப்படியில் தமிழ் மிகக்குறைவாயும் ஸம்ஸ்க்ருதம் விசேஷமாயுமுள்ளது. பெரியவாச்சான்பிள்ளை, பிள்ளைலோகாசார்யர், நிகமாந்ததேசிகர், மணவாளமாமுனிகள் முதலானவர்கள் க்ரந்தங்களில் இரண்டு பாஷையும் சமபாகமாயிருக்கலாம். இவ்வளவு ஸம்ஸ்க்ருதம் கலந்ததால் சுத்தத்தமிழர்களுக்கு இது விசித்ரமாயிருப்பினும், இந்த க்ரந்தங்களைப்படிக்கும் ஸம்ஸ்க்ருதமறிந்த ப்ராஹ்மணுதிகளுக்கு இந்த மிச்ரபாஷை ஸஹஜமாகவே அர்த்தங்கொடுக்கக் கூடியதாய் விட்டது. பல ஸம்ப்ரதாய க்ரந்தங்கள் இந்த மணிப்ரவாளத்திலிருப்பதாலும், அவைகளெல்லாம் நம்மவர்களுக்கு அறியவேண்டிய உபதேச க்ரந்தங்களாய் இருப்பதினுலும், அவைகளைப்படிக்க உபகாரமாக ஆகவேண்டுமென்று இந்தப்பத்ரிகையில் ஸம்ஸ்க்ருதக் கலப்புள்ள நடையே உபயோகிக்கப்பட்டுவருகிறது. இதனுல் இதிலடங்கிய விஷயங்களை சுத்தத்தமிழில் எழுதுவது சரியல்லவென்றுவது, கூடாதென்றுவது நாம் எண்ணவில்லை. தமிழிலுள்ள நாலாயிரப்ப்ரபந்தம் முதலான க்ரந்தங்களின்பொருளை நன்றுக அறிய, நம்மவர்களும் தமிழை லக்ஷணக்ரந்தங்களுடனும் லக்ஷ்யக்ரந்தகளுடனும் கற்று அறியவேண்டுவது அவசியமே.

உபாகர்மம்.

இந்தத்தேசத்தில் ஆஸேதுஹிமாசலம் உள்ள எல்லாத்விஜர்களாகிய ப்ராஹ்மண, க்ஷத்ரிய, வைஸ்யர்களும் தவருமல் அநுஷ்டிப்பது உபாகர்மம் என்னும் கார்யம். 'உபாகர்மம்' என்பதற்கு, உபக்ரமம் அல்லது ஆரம்பம் என்று அர்த்தம். அதாவது வேதாத்யநத்தின் ஆரம்பம். ச்ராவண மாஸத்தின் பௌர்ணமாஸையில் யஜுர்வேதிகளும், அந்த மாஸத்தின் ச்ரவணநக்ஷத்ரம் கூடிய தினத்தில் ருக்வேதிகளும், அதற்கடுத்த மாஸத்தின் ஹஸ்தநக்ஷத்ரங்கூடிய தினத்தில் ஸாமவேதிகளும் இந்த உபாகர்மத்தை அநுஷ்டித்து

வருகிறார்கள். குரு, சுக்ராஸ்தமயங்களினாலும், ஸங்க்ரமத்தினாலும், க்ரஹணத்தினாலும் ப்ரதமோபாகர்மமும் சிலவேளை இதரோபா கர்மங்களும் செய்யவேண்டிய தினங்கள் பேதிக்கும். இது சிஷ்டர் களிடத்திலும் ப்ராமாணிகமான பஞ்சாங்கங்களிலிருந்தும் அறிய வேண்டும். நம் சாஸ்திரங்களில் வேதாத்யயனத்துக்கு ஏற்பட்ட முக்யகாலம் உபாகர்மம் முதல் நாலரைமாதந்தான். இதன்முடிவில் வேதங்களின் உத்ஸர்க்கம் அல்லது விடுதல் என்னும் கர்மத்தைச் செய்ய வேண்டும். இது புஷ்யமாதம் பூர்ணிமையில் க்ரமமாய்ச் செய்யவேண்டியது. இப்படிச்செய்து கொஞ்சகாலம் அத்யயன த்தை நிறுத்திப் பிறகு சுக்ல பக்ஷத்தில் வேதாத்யயனமும் க்ருஷ்ண பக்ஷத்தில் அங்கங்களின் அத்யயனமும் செய்யவேண்டியது இப்படி உத்ஸர்க்கம் செய்யாத தோஷத்துக்குப் பிராயச்சித்தமாக உபாகர்ம தினத்தில் நாம் 'காமோऽகார்ஷீத் மந்யுரகார்ஷீத்' என்னும் மந் த்ரத்தை ஆயிரம் ஆவ்ருத்தி உச்சரிக்கிறோம். இப்படியே மறுதி னத்தில் நடத்திவரும் காயத்ரீஜபமும் 'மித்யாதீத ப்ராயச்சித்த' மாகச்செய்யப்படுகிறது. அதாவது வேதத்தின் உச்சாரணங்களில் ஏற்பட்ட ஸ்கலிதங்களுக்காக இந்தப்பிராயச்சித்தம் விதிக்கப் பட்டு அனுஷ்டிக்கப்படுகிறது. கொஞ்சமேனும் வேதாத்யயனத் தில் ச்ரத்தையில்லாத ஆதுநிகப்ராஹ்மணர்களும் இதரர்களும் இந் தப் பிராயச்சித்தங்களை நடத்திவருவது மிகவும் பரிஹாஸ்யமா கவே இருக்கிறது. ஆகிலும் விதிகளின்பலத்தால் இதை நித்யகர் மாவாக நினைத்து எல்லோரும் அனுஷ்டித்து வருகிறோம். இந்த அனுஷ்டானம் யுக்தமாகும்படி சிலர்களாவது உபநயனத்துக்குப் பிறகு பாலர்களுக்கு முக்யமான சிலபாகங்களை அத்யயனம்செய்து வைத்தால் ப்ராஹ்மணர்கள் என்று சொல்லிக்கொள்ளும் பெரு மைக்கு அநுரூபமாயிருக்கும். இந்த உபாகர்மத்தின் முக்யபாகம் ஹோமமும், அத்யயனாரம்பமுமாகிலும், தத்காலத்தில் ப்ராயேண புது யஜ்ஞோபவீதம் தரிப்பதும், தர்ப்பணம் செய்வதுமே உபா கர்மத்தின் அர்த்தமாகிவிட்டது. இவ்வளவு ப்ராசீனமாய் நம் முன்னோர்கள் அனுஷ்டித்துவந்த கர்மமானது, இப்போது அநே கமாய் நாமமாத்ர சேஷமாய் ஆகிவிட்டது துக்ககரமாகவே இருக் கிறது.

---

# The Vedanta Dipika.

## BUSINESS NOTICE.

All Literary communications, letters for publication etc., should be addressed to **The Editor, Vedanta Dipika Office, Mylapore, Madras.**

All other communications, changes of address, money orders, etc., should be sent to **The Manager, The Vedanta Dipika, Kesavaperumal Sannidhi Street**, Mylapore, Madras.

**Subscribers who have not paid their subscriptions for the current year are requested to forward the same to the Manager, at their early convenience.**

Intending advertisers are requested to apply to the Manager for terms.

---

ஸ்ரீ

# வேதாந்த தீபிகை

என்னும்

## ஸ்ரீ அகோபில மட சிஷ்ய சபை பத்ரிகை.

(ஸாதாரண ௵ மாசி ௴ ஏற்படுத்தப்பட்டது.)

---

☞ பத்ரிகைக்கு விஷயங்கள் எழுதுவதும் கடிதங்கள் அனுப்புவதும், "பத்ராதிபர், வேதாந்ததீபிகை ஆபீஸ், மைலாப்பூர்" என்று மேல்விலாஸமெழுதி அனுப்பப்படவேண்டும்.

கட்டணம் கட்டுவதும், விலாஸமாறுதல்கள் அறிவிப்பதும், மற்றெல்லா விஷயங்களும் "மானேஜர், வேதாந்ததீபிகை, கேசவப்பெருமாள் சன்னிதித் தெரு, மைலாப்பூர்" என்கிற விலாஸத்துக்கு அனுப்பப்படவேண்டும்.

நாளது௵த்திய சந்தாத்தொகையை இதுவரையிலும் செலுத்தாதவர்கள் ௸ தொகையை தாமதமின்றி வேதாந்த தீபிகை மானேஜருக்கு அனுப்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**வருஷம் 1-க்குக் கட்டணம் ரூபாய் ௨.**

# பகவத்கீதை தமிழ் மொழிபெயர்ப்பு.

## இதில் அடங்கியவை.

ராமாநுஜபாஷ்யம், தேசிகன் தாத்பர்ய சந்த்ரிகை, ஆளவந்தார் கீதார்த்த ஸங்க்ரஹ ச்லோகம், தேசிகன் கீதார்த்த ஸங்க்ரஹ ரக்ஷை, தேசிகன் கீதார்த்த ஸங்க்ரஹப் பாட்டு.

## இதுவரையிலும் மொழிபெயர்க்கப்படாதவை.

1, 2, 3, 4, 5 ஸஞ்சிகைகள் வெளியாகியிருக்கின்றன.

| | | | |
|---|---|---|---|
| ராயல் 8 பாரமுள்ள ஸஞ்சிகை | 0 | 6 | 0 |
| தபால்கூலி வி. பி. சார்ஜ் உள்பட | 0 | 8 | 0 |
| வருஷச் சந்தா (12 - ஸஞ்சிகை) | 4 | 0 | 0 |
| தபால்கூலி உள்பட | 4 | 12 | 0 |

சிந்தாத்ரிபேட்டை ஸத் ஸம்ப்ரதாய வர்த்தநீ,

34 - அக்ரஹாரம்வீதி சிந்தாத்ரிபேட்டை, சென்னை.

---


ஸ்ரீ:

## வேதாந்த தீபிகை ஆபீஸில் கிடைக்கும் புஸ்தகங்கள்.

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| 1. ஸ்ரீ கீதார்த்த ஸங்க்ரஹம்—(ஸ்ரீ. இஞ்சிமேடு - ரங்கநாதாசார்யருடைய தமிழ் வ்யாக்யாநத்துடன்) ... ... | 0 | 2 | 0 |
| 2. ஸ்ரீ த்ராவிடவேத தாத்பர்யம்—(ஸ்ரீ. எஸ். கோபால ஸ்வாமி ஐயங்காரால் எழுதப்பட்டுள்ளது) ... ... | 0 | 2 | 0 |
| 3. ஸ்ரீ அஹோபிலமடமும், அதன் ஶிஷ்யர்களின் கர்த்தவ்யங்களும் :—(ஸ்ரீ. டி. ராஜகோபாலாசார்யரால் செய்யப்பட்ட உபந்யாஸம்) ... ... ... ... ... | 0 | 2 | 0 |

வேண்டுமேவர்கள் சென்னை, மயிலாப்பூர், கேசவப்பெருமாள் ஸந்நிதி வீதியில் இருக்கும் ஸ்ரீ வேதாந்த தீபிகை மானேஜருக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.


---


Printed for the General Secretary, A. M. S. Sabha,
by W. Pushparatha Chetty & Co., K. R. Press, Madras.